# மார்ச் – 17 – தவக்கால 02ம் வார ஞாயிறு

## ஆண்டவரே என் ஒளி: அவரே என் மீட்பு: திபா. 27:1

## முதல் வாசகம் : தொடக்க நூல் 15:5–12,17–18,21

அப்பொழுது ஆண்டவர் ஆபிராமை வெளியே அழைத்து வந்து, "வானத்தை நிமிர்ந்து பார். முடியுமானால், விண்மீன்களை எண்ணிப்பார். இவற்றைப் போலவே உன் வழிமரபினரும் இருப்பர்" என்றார்.ஆபிராம் ஆண்டவர்மீது நம்பிக்கை கொண்டார். அதை ஆண்டவர் அவருக்கு நீதியாகக் கருதினார்.ஆண்டவர் ஆபிராமிடம், "இந்நாட்டை உனக்கு உரிமைச் சொத்தாக அளிக்க உன்னைக் கல்தேயரின் ஊர் என்ற நகரிலிருந்து இங்கு அழைத்து வந்த ஆண்டவர் நானே" என்றார்.அதற்கு ஆபிராம், "என் தலைவராகிய ஆண்டவரே, இதை நான் உரிமையாக்கிக் கொள்வேன் என்பதை எப்படித் தெரிந்து கொள்வேன்?" என்றார்.ஆண்டவர் ஆபிராமிடம், "மூன்று வயதுள்ள இளம் பசு, மூன்று வயதுள்ள வெள்ளாடு, மூன்று வயதுள்ள செம்மறியாடு, ஒரு காட்டுப்புறா, ஒரு மாடப்புறா ஆகியவற்றை என்னிடம் கொண்டுவா" என்றார்.ஆபிராம் இவற்றை எல்லாம் அவரிடம் கொண்டுவந்து, அவைகளை இரண்டிரண்டு கூறுகளாக வெட்டி, ஒவ்வொரு பகுதியையும் அததற்கு இணையான பகுதிக்கு எதிரெதிரே வைத்தார். ஆனால் பறவைகளை அவர் வெட்டவில்லை.துண்டித்த உடல்களைப் பறவைகள் தின்ன வந்தபொழுது ஆபிராம் அவற்றை விரட்டிவிட்டார்.கதிரவன் மறையும் நேரத்தில் ஆபிராமுக்கு ஆழ்ந்த உறக்கம் வந்தது. அச்சுறுத்தும் காரிருள் அவரைச் சூழ்ந்தது.கதிரவன் மறைந்ததும் இருள்படர்ந்தது. அப்பொழுது புகைந்து கொண்டிருந்த தீச்சட்டி ஒன்றும் எரிந்து கொண்டிருந்த தீப்பந்தம் ஒன்றும் அந்தக் கூறுகளுக்கிடையே சென்றன.அன்றே ஆண்டவர் ஆபிராமுடன் ஓர் உடன்படிக்கை செய்து, "எகிப்திலுள்ள ஆற்றிலிருந்து யூப்பிரத்தீசு பேராறுவரை உள்ள எமோரியர், கானானியர், கிர்காசியர், எபூசியர் ஆகியோர் வாழும் இந்நாட்டை உன் வழிமரபினர்க்கு வழங்குவேன்" என்றார்.

**பதில்பாடல் :** ஆண்டவரே என் ஒளி. அவரே என் மீட்பு

## இரண்டாம் வாசகம் : பிலிப்பியர் 3 : 17 --- 4 : 1

சகோதர சகோதரிகளே, நீங்கள் அனைவரும் என்னைப்போல் வாழுங்கள். நாங்கள் உங்களுக்குக் காட்டிய முன்மாதிரியின்படி வாழ்பவர்களைப் பின்பற்றுங்கள். கிறிஸ்துவின் சிலுவைக்குப் பகைவர்களாய் நடப்போர் பலர் உள்ளனர். அவர்களைப் பற்றி மீண்டும் மீண்டும் உங்களிடம் கூறியுள்ளேன். இப்பொழுதும் கண்ணீரோடு சொல்கிறேன். அழிவே அவர்கள் முடிவு. வயிறே அவர்கள் தெய்வம் மானக்கேடே அவர்கள் பெருமை. அவர்கள் எண்ணுவதெல்லாம் மண்ணுலகைச் சார்ந்தவை பற்றியே. நமக்கோ விண்ணகமே தாய்நாடு அங்கிருந்துதான் மீட்பராம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து வருவாரெனக் காத்திருக்கிறோம். அவர் தமது ஆற்றலால் தாழ்வுக்குரிய நம் உடலை மாட்சிக்குரிய தமது உடலின் சாயலாக உருமாற்றவும் அனைத்தையும் தமக்குப் பணியவைக்கவும் வல்லவர். ஆகவே என் அன்பார்ந்த சகோதர சகோதரிகளே, என் வாஞ்சைக்குரியவர்களே, நீங்களே என் மகிழ்ச்சி நீங்களே, என் வெற்றி வாகை. அன்பர்களே, ஆண்டவரோடுள்ள உறவில் நிலைத்திருங்கள்.

## நற்செய்தி : லூக்கா 9 : 28 – 36

அக்காலத்தில் இயேசு பேதுருவையும், யோவானையும், யாக்கோபையும் கூட்டிக்கொண்டு இறைவனிடம் வேண்டுவதற்காக ஒரு மலைமீது ஏறினார். அவர் வேண்டிக்கொண்டிருந்தபோது அவரது முகத்தோற்றம் மாறியது. அவருடைய ஆடையும் வெண்மையாய் மின்னியது. மோசே, எலியா என்னும் இருவர் அவரோடு பேசிக் கொண்டிருந்தனர். மாட்சியுடன் தோன்றிய அவர்கள் எருசலேமில் நிறைவேறவிருந்த அவருடைய இறப்பைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள். பேதுருவும் அவரோடு இருந்தவர்களும் தூக்கக் கலக்கமாய் இருந்தார்கள். அவர்கள் விழித்தபோது மாட்சியோடு இலங்கிய அவரையும் அவரோடு நின்ற இருவரையும் கண்டார்கள். அவ்விருவரும் அவரை விட்டுப் பிரிந்து சென்றபோது, பேதுரு இயேசுவை நோக்கி, "ஆண்டவரே, நாம் இங்கேயே இருப்பது நல்லது. உமக்கு ஒன்றும் மோசேக்கு ஒன்றும் எலியாவுக்கு ஒன்றுமாக மூன்று கூடாரங்களை அமைப்போம்" என்று தாம் சொல்வது இன்னதென்று தெரியாமலே சொன்னார். இவற்றை அவர் சொல்லிக்கொண்டிருக்கும்போது ஒரு மேகம் வந்து அவர்கள்மேல் நிழலிட்டது. அம்மேகம் அவர்களைக் சூழ்ந்தபோது அவர்கள் அஞ்சினார்கள். அந்த மேகத் தினின்று, "இவரே என் மைந்தர் நான் தேர்ந்து கொண்டவர் இவரே. இவருக்குச் செவிசாயுங்கள்" என்று ஒரு குரல் ஒலித்தது. அந்தக் குரல் கேட்டபொழுது இயேசு மட்டும் இருந்தார். தாங்கள் கண்டவற்றில் எதையும் அவர்கள் அந்நாள்களில் யாருக்கும் சொல்லாமல் அமைதி காத்தார்கள்.

**தியானம்:** ஜெபம் என்பது நம் ஆண்டவர் இயேசுவின் வாழ்விலே மிக முக்கிய பாகமாக அமைந்திருந்தது. இயேசு விடியற்காலை கருக்கலில் எழுந்து ஜெபிக்கிறார் (லூக்.4:42), மாலையில் ஜெபிக்கிறார் (லூக்.5:16), இரவு முழுவதும் ஜெபிக்கிறார் (லூக்.6:12, மத்.14:23-24, மாற்.1:35) மேலும் முக்கியமான முடிவுகள் எடுப்பதற்கு முன்பாகவும், அற்புதங்கள் செய்வதற்கு முன்பாகவும் ஜெபிக்கிறார், பாடுகள் படுவதற்கு முன்பாக கெத்சமெனியில் ஜெபிக்கின்றார் (லூக்.22:44), சிலுவையிலே ஜெபிக்கின்றார் (மாற்.15:34). ஜெபத்தையும் இயேசுவையும் பிரிக்கமுடியாது. ஜெபம் என்பது இயேசுவை தந்தையோடு இணைத்த உறவு. மண்ணகத்திற்கும் விண்ணகத்திற்கும் இணைப்புப் பாலமாக இருப்பதுதான் ஜெபம். இன்றைய நற்செய்தி வாசகத்தில் நம் ஆண்டவர் இயேசுக்கிறிஸ்து தான் பெற்றுக்கொண்ட இந்த ஜெப அனுபவத்தை தன்னுடைய சீடர்களுக்கும் கொடுக்க வேண்டும் என்று எண்ணி அவர்களை ஓர் உயர்ந்த மலைக்கு அழைத்துச் செல்கின்றார். மலை என்பது கடவுளுடைய பிரசன்னத்தைக் குறிக்கும். கடவுளோடு நாம் உறவு கொள்ள வேண்டுமென்றால் முதலில் மலைக்கு ஏற வேண்டும். மலை என்பது இந்த பூமியை விட சற்றே உயரமாக இருப்பது. மலை பூமியின்மேல் இருந்தாலும், பூமியோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பதில்லை. அதேபோல் ஆண்டவரோடு இணைந்திருக்க வேண்டுமென்றால் இந்த உலகத்தை விட்டு விலகி, அதனை மறந்து தேவ பிரசன்னத்திற்குள் நுழைவதே மலை அனுபவம். நமது மனம் ஆண்டவர்பால் மலையைப்போல் உயர்த்தப்படும்போது தேவப் பிரசன்னம் நம்மை மூடிக்கொள்ளும். தேவபிரசன்னத்தில்தான் கடவுளின் மாட்சியை, குரலை நாம் கேட்க முடியும். இரண்டாவதாக இன்றைய நற்செய்தி வாசகத்திலே நாம் பார்ப்பது இஸ்ராயேல் மக்களுக்கு கடவுளின் சட்டத்தை, பத்துக் கட்டளைகளைக் கொடுத்த மோயீசனும், இஸ்ராயேல் மக்களிடையே வல்லமையாகச் செயல்பட்டு இறைவனை மாட்சிமைப்படுத்திய இறைவாக்கினர் எலிசாவும் அவர்களுக்கு முன்பாக தோன்றுகின்றனர். அவர்கள் இயேசுவோடு அவருடைய பாடுகள், துன்பங்கள், மீட்பைக் குறித்து பேசிக் கொண்டிருக்கின்றார்கள். மோயீசனும், எலியாவும் இறைவனுக்காக வைராக்கியமாக உழைத்தவர்கள், இறைவனுடைய குரலைக் கேட்டவர்கள், இறைவனுடைய சித்தத்தை இந்த உலகத்திலே நிறைவேற்றி கடவுளை மாட்சிப்படுத்தியவர்கள். நம்முடைய வாழ்வு என்பது கடவுளின் குரலைக்கேட்டு, அவரது சித்தத்தை அறிந்து அதனை நிறைவேற்றி கடவுளை மாட்சிப்படுத்த வேண்டும். அதற்கு நாம் இறைவனின் குரலை கேட்டுக்கொண்டே இருக்க வேண்டும். இறைவார்த்தையின் வழியாக நம்மோடு அன்றாடம் பேசிக் கொண்டிருக்கும் இறைவனின் குரலைக் கேட்க நமது காதுகளை பழக்க வேண்டும். இந்த உலகத்திலே ஏதேதோ செய்து சாதனை படைத்துவிட்டு அவருடைய விருப்பத்தை, சித்தத்தை நிறைவேற்றவில்லையெனில் நம்முடைய வாழ்வு பொருளற்றதாக மாறிவிடும்.